www.Padasalai.Net

பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை- 9.

அரசுக் கடிதம் எண். (efile) 4009/ பக. 6 (2) / 2024-1, நாள். 10.05.2024

அனுப்புநர்
திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர்,
சென்னை-6.

ஐயா,

பொருள்: பள்ளிக் கல்வி – அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் – உபரி ஆசிரியர்கள் – பணி நியமன ஒப்புதல் ஏற்பளிக்காமை மேல்முறையீட்டு வழக்கு W.A(MD) No. 76 of 2019 உள்ளிட்ட வழக்குகளில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பாணை நாள் 09.04.2019-க்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை ஏற்பளித்து ஒப்புதல் அளித்தல் – வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடுதல் – தொடர்பாக.

பார்வை:

1. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை மேல்முறையீட்டு வழக்கு W. A. (MD) No.76/2019ல் வழங்கிய தீர்ப்பாணை, நாள். 31.03.2021.
2. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P. No. 320/2023 வழக்கில் வழங்கிய தீர்ப்பாணை, நாள். 20.11.2023.
3. W.A.(MD) No. 2066 of 2023, தீர்ப்பாணை நாள். 18.12.2023 மற்றும் பல்வேறு வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகள்.
4. அரசாணை (நிலை) எண்.165, பள்ளிக் கல்வி (தொ.க. 2(1)) துறை, நாள். 17.9.2019.
5. பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந. க. எண். 48834/ டி1- இ4/2023, நாள். 06.05.2024.

-----------

www.Padasalai.Net



பார்வை 5-இல் கண்டுள்ள பள்ளிக்கல்வி இயக்குநரின் அறிக்கையில், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலன் கருதியும், உபரி ஆசிரியர்களால் அரசுக்கு ஏற்பட்டு வரும் நிதியிழப்பினை தவிர்த்திடும் பொருட்டும் பணி நிரவல் செய்தல் மற்றும் பணி நியமன ஒப்புதல் வழங்குதல் சார்ந்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மேல்முறையீட்டு வழக்கு எண். WA (MD) No. 76 of 2019 உள்ளிட்ட வழக்குகளில் 09.04.2019 நாளிட்ட இடைக்கால தீர்ப்பாணையின்படி பார்வை 4ல் கண்டுள்ள அரசாணை வெளியிடப்பட்டது என்றும் இவ்வாறான நிலையில் 31.03.2021ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மேற்கண்டுள்ள மேல் முறையீட்டு வழக்கில் இறுதி தீர்ப்பாணையினை வழங்கியது. இத்தீர்ப்பாணையில் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்காற்றும் சட்டம், 2018க்குரிய விதிகள் வகுத்தளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் வரையில் உபரி ஆசிரியர்களைப் பணிநிரவல் செய்வது குறித்தும், பள்ளி நிர்வாகத்தால் பணியாளர் நிர்ணயம் செய்தல் குறித்தும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகளை கீழ் கண்டவாறு வழங்கியுள்ளது.

"... the G.O Ms No.165, School Education and [ EE 2(1) ] Department dated 17.9.2019 is hereby declared to be inoperative ...." என தீர்ப்பளித்துள்ளது.

மேலும், இவ்வழக்கின் தீர்ப்பாணை பத்தி 95 (i) ல் பின்வருமாறு ஆணை வழங்கியுள்ளது.

"..... (i) Insofar as the teaching grant for the additional staff employed in the already aided school as on the academic year 1991-92, irrespective of the medium of instructions or irrespective of the students strength, as per the teacher pupil ratio as indicated above especially in the context of RTE Act and subsequent G.O issued in this regard, the staff fixation shall be made and for those additional teaching staff, who are pressed into service for additional standard or additional class started, from the academic year 2021-22, staff grant shall be sanctioned by the State Government as such sanctioning of staff grant will be the essential requirement to meet the object of the provisions of the RTE Act, otherwise, the Fundamental Right guaranteed to the children between the age of 6 and 14 studying in those schools would get affected. ... "

3. மேற்கண்டுள்ள தீர்ப்பிணைத் தொடர்ந்து துறையின் சார்பாக மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு விடுப்பு மனு எண். 15702/2021ன்படி தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் மாண்பமை உயர்நீதிமன்றம் WA (MD) No. 76 of 2019 வழக்கில் வழங்கிய தீர்ப்பாணையின் பத்தி 95(i)-க்கு இடைக்கால தடையாணை வழங்கிய மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றம் 16.02.2024 அன்று இவ்வழக்கினை மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மாற்றி தீர்ப்பு வழங்கியுள்ளது. இத்தீர்ப்பின் முக்கியப் பகுதி பின்வருமாறு.

"..... This matter is ordered to be closed by relegating the parties to the Madras High Court. It is made clear that the court should decide the pending matter on merit without being influence by any

www.Padasalai.Net



observation made by this court during the pendency of the present proceedings or under the impugned order...."

வழக்கு தற்போது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் நிலுவையிலுள்ள பணி நியமன ஒப்புதல் அளிப்பது சார்ந்து வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கிடும் பொருட்டு பின்வரும் விவரங்கள் அரசின் பரிசீலனைக்கு பள்ளிக்கல்வி இயக்குநர் சமர்பித்துள்ளார்.

i) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P. No. 320/2023 வழக்கில் வழங்கிய தீர்ப்பாணை, நாள். 20.11.2023ல், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் பகுதி ஆயம் (Division bench) உபரி ஆசிரியர்கள் பணி நிரவல் மற்றும் பணி நியமன ஒப்புதல் சார்ந்து தொடரப்பட்ட வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்பாணையில், பணி நியமன ஒப்புதல் சார்ந்த தீர்ப்பின் முக்கியப் பகுதி பின்வருமாறு

".... 34. Therefore, we are of the considered opinion that, wherever the school is considered as a single Unit and no surplus Teachers are identified then approval is to be granted to those Teachers, who were appointed by following the procedures as contemplated under the Act and Rules in force and if they satisfy other conditions stipulated. ...."

பணி நிரவல் சார்ந்து தீர்ப்பாண்மையின் முக்கியப் பகுதி பின்வருமாறு

" ... 36. It is needless to state that a junior most teaching staff in excess in a school is to be declared as surplus. However, if the pupil ratio is increased or a new post is sanctioned in the said school, subsequently, the redeployed teachers are to be reverted back to their parent school by issuing appropriate orders by the competent authorities. Regarding pass in Teachers Eligibility Test as a requisite qualification, the State is empowered to make it as a mandatory qualification for all the State Aided Schools, including Minority Schools, under the Act and Rules in force and pass necessary orders to that effect. ... "

ii) மேலும், இவ்வழக்கில் துறையால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை ஏற்று பின்வருமாறு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

".... 40 Therefore, the matter is remitted back to the competent authorities for passing fresh orders. Such an exercise is directed to be completed within a period of twelve weeks from the date of receipt of a copy of this order. The respondents are at liberty to submit fresh representations or documents, if any, in the meanwhile. Consequently, the order passed by the learned Single Judge in W.P. (MD). No.13135 of 2022, dated 02.09.2022 and the impugned order in the Writ proceedings are set aside and the Writ Appeal stands allowed. No costs. Consequently, connected miscellaneous petition is closed. ... "

www.Padasalai.Net



iii) மேலும், பல்வேறு வழக்குகளில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை அமர்வு WA(MD) No. 76 of 2019ல் வழங்கிய தீர்ப்பாணையினை சுட்டிக்காட்டி பணி நியமன ஒப்புதல் வழங்கிட தீர்ப்பாணைகளில் நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

4. மேற்கண்ட நிலையில், WA(MD) No. 76 of 2019 உள்ளிட்ட வழக்குகளில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் இடைக்காலத் தீர்ப்பாணை வழங்கிய 09.04.2019-க்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனங்களுக்கு ஏற்பளிப்பது குறித்து வழிகாட்டு நெறிமுறைளுடன் ஆணை வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

5. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மேல்முறையீட்டு வழக்கு W.A(MD) No. 76 of 2019 உள்ளிட்ட வழக்குகளில் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய இடைக்காலத் தீர்ப்பாணை நாள் 09.04.2019-க்கு முன்னர் அரசு உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு ஒப்புதல் அளித்து ஏற்பளிக்கலாம் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

i. 1991-92க்கு முன்னர் பணியிடத்திற்கான மானியம் அனுமதிக்கப்பட்டு, பணி நியமன நாளில், அக்கல்வியாண்டிற்குரிய பணியாளர் நிர்ணய அறிக்கையின்படி அனுமதிக்கப்பட்ட நிரப்பத் தகுந்த காலிப்பணியிடங்களில், 09.04.2019-க்கு முன்னர் பள்ளி நிர்வாகம் மேற்கொண்ட நியமனங்களுக்கு ஏற்பளிக்கலாம்.

ii. தனித்த சிறுபான்மை நிர்வாகத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளைப் பொருத்தவரையில் (minority stand alone management) அப்பள்ளிகளில், குறிப்பிட்ட பாடத்தில் உபரி ஆசிரியர்கள் இல்லாத நிலையில் பத்தி (i)ல் குறிப்பிட்டுள்ளவாறு அப்பணியிடத்திற்குரிய நிரப்பத்தகுந்த காலிப்பணியிடத்தில் பள்ளி நிர்வாகம் நேரடி நியமனம் மேற்கொண்டிருப்பின், நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர் தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வில் தாள் 2ல் உரிய விருப்பப் பாடத்தில் தேர்ச்சி பெற்று நடைமுறையிலுள்ள தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்காற்றும் சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகள் உள்ளிட்ட ஏனையத் தகுதிகள் பெற்றிருப்பின் அத்தகைய நியமனங்களுக்கு மட்டும் ஏற்பளிக்கலாம்.

iii. சிறுபான்மை கூட்டு மேலாண்மை நிர்வாகத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளைப் பொறுத்தவரையில் (Minority Corporate management schools) அந்நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அனைத்துப் பள்ளிகளிலும், அக்குறிப்பிட்ட பாடத்தில் உபரி பட்டதாரி ஆசிரியர்கள் யாரும் பணியாற்றவில்லை என்ற நேர்வில், குறிப்பிட்ட ஒரு பள்ளியில் மேலே உள்ள வழிகாட்டு நெறிமுறைகள் பத்தி-(i)-ல் குறிப்பிட்டுள்ளவாறு

www.Padasalai.Net



நிரப்பத்தகுந்த காலிப்பணியிடத்தில் பள்ளி நிர்வாகம் நேரடி நியமனம் மேற்கொண்டிருப்பின், நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர் தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வில் தாள் II-ல் உரிய விருப்பப் பாடத்தில் தேர்ச்சி பெற்று நடைமுறையிலுள்ள தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்காற்றும் சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகள் உள்ளிட்ட ஏனையத் தகுதிகள் பெற்றிருப்பின் அத்தகைய நியமனங்களுக்கு மட்டும் ஏற்பளிக்கலாம்.

iv. சிறுபான்மையற்ற கூட்டு மேலாண்மை நிர்வாகத்தின் கீழ் செயல்படும் பள்ளிகளைப் பொறுத்தவரையில் (Non-Minority Corporate management schools) அந்நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அனைத்துப் பள்ளிகளிலும், அக்குறிப்பிட்ட பாடத்தில் உபரி பட்டதாரி ஆசிரியர்கள் யாரும் பணியாற்றவில்லை என்ற நேர்வில், பணியிடம் நிரப்பப்படுவதற்கு துறையால் முன் அனுமதி வழங்கப்பட்டிருப்பின் குறிப்பிட்ட ஒரு பள்ளியில் மேலே உள்ள வழிகாட்டு நெறிமுறைகள் பத்தி-(i)-ல் குறிப்பிட்டுள்ளவாறு அக்குறிப்பிட்ட பாடத்திற்கு நிரப்பத்தகுந்த காலிப்பணியிடத்தில் பள்ளி நிர்வாகம் நடைமுறையிலுள்ள இனச்சுழற்சி முறையினை பின்பற்றி (communal rotation) நேரடி நியமனம் மேற்கொண்டிருப்பின், நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர் தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வில் தாள் II-ல் உரிய விருப்பப் பாடத்தில் தேர்ச்சி பெற்று நடைமுறையிலுள்ள தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்காற்றும் சட்டம் மற்றும் விதிகளில் வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதிகள் உள்ளிட்ட ஏனையத் தகுதிகள் பெற்றிருப்பின் அத்தகைய நியமனங்களுக்கு மட்டும் ஏற்பளிக்கலாம்.

v. கூட்டு மேலாண்மை நிர்வாகத்தினைப் பொருத்தவரையில், அம்மேலாண்மையின் கீழ் வெவ்வேறு மாவட்டங்களில் பள்ளிகள் செயல்பட்டுவரும் நிலையில், தொடர்புடைய அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்தும் தொடர்புடைய பாடத்தில் உபரி ஆசிரியர் எவரும் பணியாற்றவில்லை என்பதற்குரிய சான்று பெற்று அதனடிப்படையிலேயே நியமன ஒப்புதல் வழங்கலாம்.

vi. சிறுபான்மையற்ற பிற தனித்தியங்கும் பள்ளிகளைப் பொருத்தவரையில் (Non Minority single management schools) காலிப் பணியிடம் நிரப்புவதற்கு துறையால் முன் அனுமதி வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய நேர்வுகளில் மட்டும், அப்பள்ளியில் அப்பாடத்தில் உபரி ஆசிரியர்கள் இல்லாத நிலையில், மேலே உள்ள வழிகாட்டு நெறிமுறைகள் பத்தி-(i)-ல் குறிப்பிட்டுள்ளவாறு நிரப்பத்தகுந்த காலிப்பணியிடத்தில் பள்ளி நிர்வாகம் நடைமுறையிலுள்ள இனசுழற்சி முறை (communal rotation)-யினை நேரடி நியமனம் மேற்கொண்டிருப்பின், நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர் தமிழ்நாடு ஆசிரியர் தகுதித் தேர்வில் தாள் IIல் உரிய விருப்பப் பாடத்தில் தேர்ச்சி பெற்று நடைமுறையிலுள்ள தமிழ்நாடு தனியார் பள்ளிகள் ஒழுங்காற்றும் சட்டம் மற்றும்

www.Padasalai.Net



விதிகளில் வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி, உள்ளிட்ட ஏனையத் தகுதிகள் பெற்றிருப்பின் அத்தகைய நியமனங்களுக்கு மட்டும் ஏற்பளிக்கலாம்.

vii. மேற்கண்டுள்ள நெறிமுறைகளின்படி, 09.4.2019க்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பணிநியமனங்களுக்கு ஏற்பளிப்பு வழங்க பரிசீலிக்கும்போது, பணி நியமனம் தொடர்பான கோப்புகளை முழுமையாக முதன்மைக் கல்வி அலுவலர் கூர்ந்தாய்வு செய்ய வேண்டும். தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதிகள் 1974 விதி எண்.15(4)(II)ல் குறிப்பிட்டுள்ள நெறிமுறையின் அடிப்படையில் தேவையேற்படும் நேர்வுகளில் மட்டுமே நேரடி நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதிசெய்வதுடன், பள்ளி நிர்வாகத்தால் வழங்கப்பட்ட பணிநியமன ஆணை, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு ஒப்புதல் கோரி பெறப்பட்ட முந்தைய கோப்புகள், பணியாளரின் வருகைப் பதிவேடு, பணியாளருக்கு பள்ளி நிர்வாகத்தால் ஊதியம் வழங்கப்பட்ட பதிவேடு மற்றும் தொடர்புடைய இதர ஆவணங்கள் உள்ளிட்ட அனைத்து அசல் ஆவணங்களையும் முழுமையான பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டும். காலிப்பணியிடம் ஏற்பட்ட நாள், அந்நாளில் அப்பணியிடம் மேலே உள்ள வழிகாட்டு நெறிமுறைகள் பத்தி-(i)-ல் குறிப்பிட்டுள்ளது போன்று நிரப்பத்தகுந்த காலிப்பணியிடமா என்பதனை உறுதிப்படுத்துவதுடன் ஆசிரியர் தகுதித் தேர்வுச் சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து கல்விச் சான்றுகளையும் ஒருங்கே பரிசீலித்து தகுதியுள்ள நேர்வுகளுக்கு மட்டும் ஏற்பளிப்பு ஆணையினை வழங்கி அதன் விவரத்தினை EMIS ல் பதிவேற்றம் செய்திட வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள

10.5.2024

அரசு செயலாளருக்காக.

10.5.24

1/2